**பயிர்களைத் தாக்கும் மாவுப் பூச்சிகள் 7 மாதங்களுக்குள் கட்டுப்படுத்தப்படும்**

First Published : 03 Dec 2010 01:57:26 PM IST

மதுரை, டிச. 2: தமிழகத்தில் பயிர்களைத் தாக்கி வரும் மாவுப் பூச்சிகளை 7 மாதங்களுக்குள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேசபூபதி தெரிவித்தார்.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் எர்ராம்பட்டி கிராமத்தில் பப்பாளி மாவுப்பூச்சி ஒட்டுண்ணி வழங்கும் விழா புதன்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்குத் தலைமை வகித்து துணைவேந்தர் பேசியதாவது:

தமிழகத்தில் கடந்த 2008-ம் ஆண்டு முதல் பப்பாளி, மரவள்ளிக்கிழங்கு உள்பட 56 வகை பயிர்களை மாவுப்பூச்சி தொடர்ந்து தாக்கி வருவதால், பயிர்கள் நாசமடைந்துள்ளன. விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டம் அடையும் சூழ்நிலை ஏற்பட்டது. மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பயிர்களில் பூச்சி மருந்து உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. இப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இலங்கையில் ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி, அங்குள்ள விவசாயிகள் வெற்றி கண்டுள்ளனர். அங்கு மாவுப் பூச்சியே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஆகவேதான் தமிழகத்திலும் ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது, 10 வேளாண் கல்லூரிகளிலும், 14 வேளாண் அறிவியல் மையங்களிலும் ஒட்டுண்ணிகளைத் தயார் செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் மாவுப் பூச்சிகள் ஜூன் மாதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என்றார்.

ஒட்டுண்ணிகளை விவசாயிகளுக்கு வழங்கி மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் பேசியது:

மதுரை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின்போது, பப்பாளி போன்ற பயிர்களைத் தாக்கும் மாவுப் பூச்சிகள் குறித்து விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அதற்குத் தீர்வு காணும் வகையில் உடனடியாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தரை தொடர்பு கொண்டு தெரிவிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் ஒட்டுண்ணி மூலம் மாவுப்

பூச்சிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அவரும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இந்த முயற்சிக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் அவர்.
நிகழ்ச்சியில் தேசிய வேளாண் முக்கிய பூச்சிகள் மைய இயக்குநர் இரபீந்திரா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக இயக்குநர் (பயிர் பாதுகாப்பு) எ.ஐ.ஜோனத்தன், பி.மூர்த்தி எம்எல்ஏ, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் க.வைரவன், மக்கள் தொடர்பு அலுவலர் இரா.அண்ணா மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**மதுரை அருகே 105 கோடியில் வேளாண் விற்பனை முனையம்**

First Published : 03 Dec 2010 10:49:40 AM IST

மதுரை, டிச. 2:தென் மாவட்டங்களுக்கான வேளாண் விற்பனை முனையம் | 105 கோடியில் மதுரை அருகே முக்கம்பட்டியில் அமைக்கப்பட உள்ளது என்று வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.
மதுரை மாவட்டம் திருவாதவூர்- ஒத்தக்கடை இடையிலான முக்கம்பட்டி கிராமத்தில் இந்த முனையம் அமைக்கப்படுகிறது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தை அமைச்சர் வியாழக்கிழமை பார்வையிட்டு கூறியது:
தமிழ்நாட்டில் வேளாண் விற்பனை முனையங்கள் (மார்க்கெட்டிங் டெர்மினல்)அமைக்கப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்து இருந்தார். அதன்படி சென்னை, பெருந்துறை, மதுரை ஆகிய இடங்களில் இவை அமைக்கப்படுகின்றன.
சென்னை அருகே நாவலூர், பெருந்துறை, மதுரை மாவட்டத்தில் முக்கம்பட்டி ஆகிய இடங்களில் இந்த முனையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. பெருந்துறையில் | 111.50 கோடியிலும், நாவலூரில் | 113.85 கோடியிலும், முக்கம்பட்டியில் | 105.05 கோடியிலும் இவை அமைக்கப்படுவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.
முக்கம்பட்டியில்50 ஏக்கர் பரப்பளவில் முனையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த மையத்தில் 12 தென் மாவட்ட விவசாயிகள் தங்கள்விளைபொருள்களை இருப்பு வைத்து விற்பனை செய்து கொள்ள முடியும்.
குளிர்பதன வசதி: தரம் பிரிப்பு மையம், குளிரூட்டப்பட்ட வாகன வசதி,பதப்படுத்தும் வசதி, சிப்பம் கட்டும் அறை, தானியங்கி காய்கனி சுத்தம் செய்யும் இயந்திர வசதி, தானியங்கி காய்கனி தரம் பிரிக்கும் இயந்திர வசதி, பிளாஸ்டிக் கொள்கலன் வசதி, 10 கிலோ மற்றும் 100 கிலோ நிலுவைத் திறன் கொண்ட மின்னணு எடைத் தராசுகள், பழம் பழுக்க வைக்கும் வசதி போன்ற வசதிகள் உலகத் தரத்துடன் அமைக்கப்பட உள்ளன.

ஏலமிடும் மையமும் இதில் இயங்கும். தென் மாவட்டங்களில் 20இடங்களில் இதற்கான கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட உள்ளன. உலகத் தரம் வாயந்த அளவில் இம்முனையம் அமைக்கப்பட இருக்கிறது. கட்டடப் பணிக்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. இன்னும் 3 மாதங்களில் பணிகள் தொடங்கும்.2 ஆண்டுகளில் இந்தப் பணி நிறைவு பெறும். தென் மாவட்ட விவசாயிகளுக்கு

இந்த முனையம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மதுரையில் நவீன காய்கறி மார்க்கெட்: மதுரையில் மாநகராட்சி எல்லைக்குள் அவனியாபுரம் பகுதியில் இதே வசதிகளுடன் கூடிய நவீன காய்கனி சந்தை இடம்பெற இருக்கிறது. மத்திய அமைச்சர் மு.க.அழகிரி முயற்சியின் பலனாக சந்தை அமைய உள்ளது. அதற்காக 11.46 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு மாநகராட்சி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் |85 கோடி செலவில் நவீன காய்கனிச் சந்தை அமைக்கப்பட உள்ளது. அதில் | 30 கோடி முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன என்றார்.

அமைச்சருடன் வேளாண்விற்பனை வாரியத் தலைவர் கே.பி.டி.கணேசன், மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேசபூபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**முட்டை கொள்முதல் விலை தொடர் சரிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,01:48 IST

நாக்கல்: முட்டை விலை தொடர் வீழ்ச்சியடைந்து வருகிறது. ஒரே வாரத்தில் முட்டை விலை 62 காசு சரிந்துள்ளது, கோழிப்பண்ணையாளர்களை அதிர்ச்சியடைச் செய்துள்ளது. நாமக்கல் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில் ஆயிரத்துக்கும் அதிகமான கோழிப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் நாள்தோறும் 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை சத்துணவு திட்டம், கேரள மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. குளிர்சீஸன் காரணமாக கடந்த நவம்பர் மாதம் முட்டை விலை கிடுகிடுவென ஏற்றம் கண்டது. அதன்படி முட்டை கடந்த நவம்பர் மாதம் முட்டை விலை வரலாறு

காணாத அளவில் 290 காசுகள் நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவியது. முட்டை விலையேற்றம் காரணமாக ஹோட்டல்களில் முட்டை தயாரிப்பு உணவுப் பொருட்களின் விலையும் ஏற்றம் கண்டது. இந்நிலையில் பண்ணையாளர்கள் எதிர்பார்த்தபடி முட்டை விலை ஏற்றம் காணவில்லை.

கடந்த மாதம் ஒரே நாளில் முட்டை விலை 10 காசு வீதம் குறைத்து 280 காசாக நிர்ணயிக்கப்பட்டது. அந்த விலை தொடர்ந்து இரு வாரங்களுக்கு மேல் நீடித்து வந்த நிலையில் 2 காசு வீதம் முட்டை ஏற்றம் கண்டு 282 காசாக நிர்ணயிக்கப்பட்டது. இச்சூழலில் கடந்த ஒரு வாரத்துக்கு முன் அய்யப்பன் கோவில் சீஸன் துவங்கியது. அதன்காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக முட்டை நுகர்வு குறைந்தது. முட்டை விலையை குறைக்க வேண்டி நிலைக்கு தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவினர் தள்ளப்பட்டனர். அதன்படி சென்ற 27ம் தேதி முட்டை விலை 15 காசு குறைத்து 267 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

அதையடுத்து 29ம் தேதி மீண்டும் 15 காசு குறைத்து 252 காசாகவும், டிசம்பர் 2ம் தேதி 17 காசுகள் குறைத்து 235 காசாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 235 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை 15 காசுகள் குறைத்து 220 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று மீண்டும் 15 காசுகள் குறைத்து 220 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் வீழ்ச்சியடைந்து வருவது கோழிப்பண்ணையாளர்களை அதிர்ச்சியடைச் செய்துள்ளது. மேலும், ஒரே வாரத்தில் முட்டை விலை 62 காசு சரிந்துள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 235 காசுகள், விஜயவாடா, தனுகு 235 காசுகள், சென்னை 240, காசுகள், மைசூர் 220 காசுகள், பெங்களூர் 220 காசுகள், மும்பை 260 காசுகள், டில்லி 270 காசுகள், பர்வாலா 252 காசுகள், கோல்கத்தா 265 காசுகள். நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை 3 ரூபாய் குறைத்து 29 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை 5 ரூபாய் ஏற்றம் கண்டு 42 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. அய்யப்பன் கோவில் சீஸன், தொடர் மழைப்பொழிவு இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. முட்டை விலை 220 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபோதும், பண்ணைகளில் முட்டை 180 காசுகள் வீதமே கொள்முதல் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அதனால் கோழிப்பண்ணையாளர்கள் கடும் பாதிப்புள்ளாகியுள்ளனர். அதே நேரத்தில் சில்லரை வியாபாரிகள் முட்டைக்கு 45 பைசா முதல் 50 பைசா வரை லாபம் பார்ப்பதால், மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,02:02 IST

வேலூர்: ""தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பயிர் சேதத்துக்கு ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்,'' என, தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சிவசாமி பேசினார். தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி , பொதுக் கூட்டம் வேலூரில்நடந்தது. வேலூர் கொணவட்டத்தில் துவங்கிய பேரணிக்கு தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சிவசாமி தலைமை வகித்தார்.

ஆந்திரா ரயித்து சங்க தலைவர் விஜய சந்திர நாயுடு பேரணியை துவக்கி வைத்தார். அண்ணாதுரை கலைஅரங்கம் அருகே பேரணி முடிந்தது. தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் சிவசாமி பேசியது: தமிழகத்தில் பருத்தி உற்பத்தி குறைந்து விட்டதால் ஜவுளித்தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கூலியாள் பற்றாக்குறையை சமாளிக்க தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். அதிகளவு பயிர் சேதம் செய்யும் காட்டு பன்றியை அழிக்க அனுமதி கொடுக்க வேண்டும். தமிழக அரசின் 2 லட்சம் புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தில் 4 ஸ்டார் மோட்டார்களை இம்மாத முதல் வாரத்துக்குள் பொருத்தினால் மட்டும் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி கால அவகாசம் அளிக்க வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் தோல் கழிவுகளால் பாதிக்கப்பட்ட நிலத்திற்கு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்கிட வேண்டும். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுகாவில் சிப்காட் தொழிற்சாலைகளுக்கு 5,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதையும், கோவை மாவட்டத்தில் பைபாஸ் சாலைகளுக்கு 1,500 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதையும் அரசு கை விட வேண்டும். தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால் 12 லட்சம் ஏக்கர் நெற் பயிர் நீரில் மூழ்கி உள்ளன. 5 லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்ட நெற் பயிர்கள் அறுவடை செய்ய முடியாமல் அழுகி வருகிறது.பயிர் சேதத்துக்கு ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

**வெள்ளத்தால் பாதித்த விவசாயிகளுக்கு ஓராண்டுக்கு பின் பயிர் காப்பீட்டு தொகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,02:54 IST

சிதம்பரம் : கடந்த ஆண்டு மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கும் விழா சிதம்பரத்தில் நடந்தது.கலெக்டர் சீத்தாராமன் வரவேற்றார். நிகழ்ச்சியில் எம்.பி., திருமாவளவன், காட்டுமன்னார்கோவில் எம்.எல்.ஏ., ரவிக்குமார், சேர்மன்கள் செந்தில்குமார், பவுஜியாபேகம், மாமல்லன் மற்றும் அதிகாரிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில் 11 ஆயிரத்து 646 விவசாயிகளுக்கு 2 கோடியே 68 லட்சத்து 30 ஆயிரத்து 993 ரூபாய் இழப்பீடு தொகைக்கான காசோலையை அமைச்சர் பன்னீர்செல்வம் வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், "மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடச் சென்ற போது  கடந்த ஆண்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுக்கு காப்பீடு தொகை வழங்கவில்லை என முறையிட்டனர். கோரிக்கையை ஏற்று போர்க்கால அடிப்படையில் 24 மணி நேரத்தில் இத்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டு தற்போது வழங்கப்பட்டது' என்றார்.

பரங்கிப்பேட்டை: பு.முட்லூர் கலைஞர் நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த ஒரு வாரமாக சி.முட்லூர் அரசு கலைக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் பன்னீர்செல்வம் நேற்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறி உணவுப் பொட்டலம் வழங்கினார்.

கடலூர்:  பாதிரிக்குப்பம் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு முகாம்களில் உள்ள 500க்கும் மேற்பட்டோருக்கு எம்.எல்.ஏ., அய்யப்பன் உணவு பொட்டலங்கள் வழங்கினார்.

கிள்ளை: சிதம்பரம் தொகுதி எம்.பி.,திருமாவளவன் மøழால் பாதிக்கப்பட்ட குண்டுமேடு, நவாப்பேட்டை, மடுவங்கரை, புஞ்சைமகத்து வாழ்க்கை பகுதி மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

புவனகிரி: வெள்ளாறு கரை உடைப்பால் பாதிக்கப்பட்ட மஞ்சக்கொல்லை, மிராளூர் ஆகிய பகுதிகளை நேற்று காலை கலெக்டர் சீத்தாராமன் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பண்ருட்டி: மழையால் பாதிக்கப்பட்ட களத்துமேடு, திடீர்குப்பம்,  அம்பேத்கர் நகர், செட்டிப்பட்டறை காலனி, சுவர் இடிந்த விழுந்த திருவதிகை நகராட்சி துவக்கப் பள்ளி மற்றும் வீடுகளை சேர்மன் பச்சையப்பன், கமிஷனர் உமா மகேஸ்வரி பார்வையிட்டனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில், நவீன தொழில் நுட்ப செயல்விளக்க கண்காட்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,01:50 IST

நாமக்கல்: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயம் மற்றும் கால்நடை சார்ந்த மூன்று நாள் நவீன தொழில்நுட்ப செயல்விளக்க கண்காட்சி நேற்று துவங்கியது. கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சந்திரகாசன் தலைமை வகித்தார்.

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துணைப் பொது மேலாளர் பழனிசாமி கண்காட்சியை திறந்து வைத்து பேசினார். கண்காட்சியை முன்னிட்டு, போயர், தலைச்சேரி, சிரோகி ரக ஆட்டினங்கள், நாட்டுக்கோழி ரகம், வான்கோழிகள், வாத்து, ஜப்பானியக் காடைகள், அலங்கார மீன் வளர்ப்பு கொண்ட அரங்குகள் அமைக்கப்பட்டன.

மேலும், விவசாயத்துக்கு தேவையான டிராக்டர், களையெடுக்கும் இயந்திரம், அறுவடை இயந்திரம், சொட்டுநீர் பாசன கருவிகள், விதைகள், ஆட்டுப்பண்ணைக் கருவிகள், புல்வெட்டும் கருவிகள் ஆகியவை இடம் பெற்றன. மேலும், ஆடு வளர்ப்போர் சங்கம், குழுக்களின் கிராம வேளாண் இடுபொருட்கள் அங்காடி, வாழ்ந்து காட்டுவோம் பயனாளிகள் கண்காட்சி என மொத்தம் 42 அரங்குகள் இடம்பெற்றன.

வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சார்பில் கறவை மாடு, ஆடு, வெண்பன்றி, முயல், கோழிப்பண்ணை, தீவன ஆலை, இறைச்சிக் கூடம், பால்வளத் துறை, கால்நடை தீவனப் பகுப்பாய்வகம், கோழியின நோய் ஆய்வகம் மற்றும் தீவனத் திடல் பண்ணைகள் என பல்வேறு செயல்விளக்க முகாம் இடம்பெற்றது. இக்கண்காட்சியை பள்ளி மாணவர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் கண்டு ரசித்தனர். இக்கண்காட்சி நாளை வரை நடக்க உள்ளது. வேளாண் அறிவியல் நிலைய அலுவலர்கள், விவசாயிகள், தொழில் முனைவோர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கூடுதல் விலையில் காய்கறி விற்பனைக்கு தடை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,01:48 IST

நாமக்கல்: ""மாவட்டத்தில் உள்ள உழவர்சந்தை, பொது காய்கறி மார்க்கெட்டுகளில் மூன்று நாட்களுக்கு தேவையான காய்கறிகள் இருப்பில் வைத்திருக்க வேண்டும். லாரி வேலைநிறுத்தத்தை காரணம் காட்டி காய்கறிகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதை கட்டுப்படுத்த வேண்டும்," என, மாவட்ட கலெக்டர் மதுமதி பேசினார். நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நாடு தழுவிய லாரி வேலைநிறுத்தப் போராட்டத்தை சமாளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் மதுமதி தலைமை வகித்து பேசியதாவது: டிசம்பர் 5ம் தேதி நடக்க உள்ள லாரி வேலைநிறுத்தப் போராட்டத்தால் மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளுக்கும் முதல் நாளே போதுமான அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்ல வேண்டும். அதில் எவ்வித தடையும் ஏற்படாத வகையில், மாவட்ட வழங்கல் அலுவலர் கண்காணிக்க வேண்டும்.

அதுபோல் மாவட்டத்தில் உள்ள உழவர்சந்தை, பொது காய்கறி மார்கெட்டுகளில் மூன்று நாட்களுக்கு தேவையான காய்கறிகள் இருப்பில் வைத்திருக்க வேண்டும். வேலைநிறுத்தத்தை காரணம் காட்டி காய்கறிகள் அதிக விலைக்கு விற்பனை செய்யாதவாறு கட்டுப்படுத்த வேண்டும். ரேஷன் கடைகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள், காய்கறிகள் கொண்டு செல்வதற்கு அரசுப் போக்குவரத்துக்கழக வாகனங்களை சூழ்நிலைக்கு ஏற்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுபோல் தனியார் பஸ்களில் தேவை ஏற்படும் போது அத்தியாவசியப் பொருட்கள் காய்கறி, பால் ஆகியவற்றை கொண்டு செல்ல வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். லாரி வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது மக்களுக்கு எவ்வித இடையூறு அசம்பாவிதங்களும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு வசதிகளை போலீஸார் மேற்கொள்ள வேண்டும். அவ்வப்போது போலீஸார் ரோந்துப் பணி மேற்கொண்டு அதை கண்காணிக்க வேண்டும்.

நகராட்சி, டவுன் பஞ்சாயத்து, கிராமப் பஞ்சாயத்துகளில் தடையின்றி குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். லாரி வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக மற்ற வாகனங்களுக்கு தேவையான பெட்ரோல், டீஸல் போன்றவற்றை போதுமான அளவு இருப்பு வைக்க சம்மந்தப்பட்ட ஏஜன்ஸி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அனைத்து அரசு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகள் இருப்பு வைத்திருக்க வேண்டும். மருந்து மாத்திரைகளை கொண்டு செல்ல ஆம்புலன்ஸ்களை பயன்படுத்தலாம். போக்குவரத்து இடையூறு ஏற்படாமல் இருக்க சாலைகளை, சாலைப்பணியாளர்கள் கண்காணிக்க வேண்டும்.

இதை நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் கண்காணிக்க வேண்டும். மேலும், ஆர்.டி.ஓ., தாசில்தார், ஆர்.ஐ., வி.ஏ.ஓ., உள்ளிட்ட அனைவரும் தொடர் பணியில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போலீஸாருடன் இணைந்து பணிபுரிய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். மாவட்ட போலீஸ் எஸ்.பி., பாரி, டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி, கூடுதல் எஸ்.பி., கண்ணம்மாள், ஆர்.டி.ஓ.,க்கள் ராமசாமி, தங்கவேல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பிச்சை உட்பட அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

**ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் இழப்பீடு பா.ம.க., தலைவர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,03:13 IST

திருக்கோவிலூர் : மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமென பா.ம.க., மாநில தலைவர் ஜி.கே.மணி கூறினார். விழுப்புரம்  மாவட்டம் திருக்கோவிலூரில் நேற்று அவர்  நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில்

பெய்துவரும் பருவ மழையால் வெள்ளசேதம் ஏற்பட்டுள்ளது. பரவலாக விவசாய பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. கூரை வீடுகளும் பெருமளவில் சேதமடைந்துள்ளது. மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப் படையில் மீட்பு பணிகளை நிறைவேற்றிட வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். தமிழகம் முழுவதும் சேதமடைந்துள்ள சாலைகளை உடனடியாக சீரமைக்க வேண்டும்.தேர்தல் கூட்டணி பற்றி பேச கால அவகாசம் உள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்திற்குமேல் அது பற்றி பா.ம.க., முடிவு எடுக்கும். கூட்டணி பற்றி இறுதி முடிவை கட்சி நிறுவனர் ராமதாஸ் எடுப்பார்.இவ்வாறு ஜி.கே.மணி கூறினார்.

**நிரம்பி வழிகிறது சாத்தனூர் அணை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,03:13 IST

திருக்கோவிலூர் : சாத்தனூர் அணை முழு கொள்ளவான 7,321 மில்லியன் கன அடியை எட்டியதால் உபரி நீர் முழுவதும் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை அதன் முழு கொள்ளளவான 7,321 மில்லியன் கன அடியை நேற்று முன்தினம் எட்டியது. இதனால் அணைக்கு வரும் உபரி நீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படுகிறது.நேற்று காலை 7 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 3,479 கன அடிநீர் வந்து கொண்டிருந்தது. இவை அனைத்தும் வெளியேற்றப்பட்டது. அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் அணையில் 24 மணி நேர கண்காணிப்பை தீவிரப் படுத்தியுள் ளனர்.

கல்வராயன்மலையில் உருவாகும் முஸ்குந்தா நதி, துரிஞ்சல் ஆறு மற்றும் ஓடைகளில் இருந்து வரும் தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால், சாத்தனூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ள உபரி நீரையும் சேர்த்து விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அணைக்கட்டில் நேற்று காலை 11 மணி நிலவரப்படி விநாடிக்கு 11 ஆயிரம் கன அடி நீர் சென்று கொண்டிருந்தது.மணலூர்பேட்டை, திருக்கோவிலூர், அருளவாடி உள்ளிட்ட இடங்களில் உள்ள தரைப் பாலங்களின் மீது தண்ணீர் செல்வதால் இவ்வழியாக செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

**பயிர்கள் சேதம் குறித்து புகார் தெரிவிக்கலாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,03:09 IST

விழுப்புரம் : மழையினால் பாதிக் கப்பட்ட விவசாய பயிர் கள் குறித்து தகவல்களை தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.விழுப்புரம் மாவட்டத் தில் பெய்து வரும் கனமழையினால் விவசாய பயிர் கள் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர் சேதங்களை கணக் கெடுக்கும் பணியில் வேளாண்துறையின் அனைத்து நிலையிலும் உள்ள களப்பணியாளர் கள் ஈடுபட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி விவரங்களை தெரிவிக் குமாறு வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்

**ரூ.2 லட்சத்துக்கு சூரியகாந்தி விதை வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,04:52 IST

வெள்ளகோவில்:வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற் பனை கூடத்தில் சூரியகாந்தி ஏலம் நடந்தது.தொடர் மழை காரணமாக கடந்த வாரம் சூரியகாந்தி வரத்தில்லை; ஏலம் நடக்கவில்லை. மழை சற்று ஓய்ந்துள்ளதால், இந்த வார ஏலத் துக்கு ஒன்பது விவசாயிகள் 140 மூட்டை சூரியகாந்தி விதையை கொண்டு வந்தனர்.நல்ல முதல் தரம் 32.50 ரூபாய்; இரண் டாம் தரம் 31 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அனைத்து மூட்டைகளையும் மூன்று வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இரண்டு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**56 பயிர்களை பாதிக்கும் மாவுப்பூச்சிகளை அழிக்கும் அமெரிக்க ஒட்டுண்ணிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,03:21 IST

மதுரை: பப்பாளி உட்பட 56 பயிர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் மாவுப்பூச்சிகளை அழிக்க அமெரிக்காவில் இருந்து இறக்கமதி செய்யப்பட்ட ஒட்டுண்ணிகள் நேற்று மதுரையில் வெளியிடப்பட்டன.பப்பாளி, மரவள்ளி, பருத்தி, பயறு வகை, மலர் பயிர்களில் மாவுப்பூச்சி என்னும் ஒருவகை பூச்சிகள் வெகுவாக பரவி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் 30 முதல் 80 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது. இவற்றை பூச்சிக் கொல்லிகளை கொண்டு அழிக்க முடியவில்லை. இதையடுத்து ஒருவகை ஒட்டுண்ணிகளைக் கொண்டு அழிக்கும் புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "அசிரோபேகஸ், சூட்லெப்ட்டோமாஸ்டிக்ஸ், அனாகைரஸ்' போன்ற இந்த ஒட்டுண்ணிகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றை மாவுப்பூச்சிகள் உள்ள பகுதியில் வெளியிட்டால், அவை சில

நாட்களிலேயே பல்கி பெருகிவிடும். இவற்றின் உணவு மாவுப்பூச்சி மட்டுமே. அவை இல்லையெனில் இந்த ஒட்டுண்ணிகளும் உயிர்வாழாது. எனவே இவற்றால் பயிர்களுக்கு பாதிப்பு வராது. இந்த ஒட்டுண்ணிகள் அலங்காநல்லூர் பகுதியில் நேற்று வெளியிடப்பட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார். மூர்த்தி எம்.எல்.ஏ., முன்னிலையில், கலெக்டர் சி.காமராஜ் வெளியிட்டார். அவர் கூறியதாவது:இலங்கையில் உருவான மாவுப்பூச்சியை இந்த ஒட்டுண்ணிகளை பயன்படுத்தி முற்றிலும் அழித்துவிட்டனர். எனவே தமிழகத்தில் 10 விவசாய கல்லூரிகள், 14 விவசாய அறிவியல் மையங்களில் இந்த ஒட்டுண்ணிகளை தயார் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மதுரையில் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் மாவுப்பூச்சி பற்றி தெரிவித்தனர். அதற்கு தீர்வுகாண இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். நிகழ்ச்சியில் பெங்களூரு தேசிய விவசாய பூச்சிகள் மைய இயக்குனர் ரபீந்திரா, தமிழக விவசாய பல்கலை இயக்குனர் ஜோனத்தான், மதுரை விவசாய கல்லூரி முதல்வர் வைரவன், விவசாய இணை

இயக்குனர் சங்கரலிங்கம், துணைஇயக்குனர்கள் சேவுகபெருமாள், மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணா பங்கேற்றனர்.

**குருத்துப்பூச்சி தாக்குதல் :வேளாண்துறை எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,01:31 IST

கரூர்: நெல் பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக்கொல்லி பயன்படுத்த கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது: கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட வீரராக்கியம், மணவாசி, கட்டளை, மாயனூர், திருக்காம்புலியூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிரில் ஆனைக்கொம்பன் ஈ, குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டுப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. தொடர்ந்து ஒருவாரமாக மேகமூட்டம் மற்றும் மழை உள்ளதால் இலை சுருட்டுப்புழுவின் தாக்குதல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்நேரத்தில் மேலுரமாக யூரியா இடுவதை தவிர்த்து, ராசாயன பூச்சிக்கொல்லி அல்லது ரசாயன மருந்துகளில் ஒன்றை தெளித்து பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம். பாஸ்போமிடான் 150 மி.லி., அல்லது, எண்டோசல்பான் 400 மி.லி., அல்லது எக்காலக்ஸ் 400 மி.லி., அல்லது பாசலோன் 400 மி.லி., என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும், வேளாண்மை தொழில்நுட்பம் மற்றும் இடுபொருள் தேவைக்கு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**பயிர் காப்பீடு முறையில் மாற்றம் : கிராமங்களில் ஆய்வு செய்ய முடிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2010,23:45 IST

சிவகங்கை : பயிர் காப்பீடு திட்டத்தில் இழப்பீடு வழங்குவது குறித்து பிர்க்கா அளவில் ஆய்வு நடத்துவதற்கு பதில், வருவாய் கிராம அளவில் நடத்த, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் வெள்ளம், வறட்சி, பூச்சி தாக்குதலில் பாதிக்கப்படும் பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. இதற்கு பிர்க்கா அளவில் ஆய்வு செய்யப்பட்டு, தொகை அறிவிக்கப்படுகிறது. "இதில் விவசாயிகளுக்கு முழு பலன் கிடைப்பதில்லை. பாதிப்பு ஒவ்வொரு கிராமத்திலும் வேறுபடுகிறது. சிறு, குறு விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். ஆய்வின் போது முன் அறிவிப்பு செய்வதில்லை,' என விவசாய சங்கங்கள் கருத்து தெரிவித்தன. இதை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு சிவகங்கை, நாமக்கல், கடலூர் மாவட்டங்களில் முதற்கட்டமாக, வருவாய் கிராம அளவில் ஆய்வு நடத்த முடிவு செய்துள்ளது. இம்முறையில் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படும் பட்சத்தில், தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும். விவசாய சங்க மாவட்ட தலைவர் ஆதிமூலம் கூறுகையில்,""ஒன்றிய, பிர்கா அளவில் கணக்கெடுத்து, இழப்பீடு வழங்குவதால், உண்மையிலேயே பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. புது முறையில், வெளிப்படையாக கணக்கெடுக்க வேண்டும்," என்றார்.

**நெற்பயிர்களை டிச.15க்குள் காப்பீடு செய்ய வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,22:06 IST

சிவகங்கை: ""நெற்பயிருக்கு காப்பீடு செய்ய டிச.,15 ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்த வேண்டும்," என, விவசாய இணை இயக்குனர் தங்கச்சாமிபாண்டியன் தெரிவித்தார். அவர் கூறியது: நெல் பயிருக்கு வறட்சி, வெள்ளம், புயல், பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் ஏற்படும் பாதிப்பிற்கு நிவாரணம் பெற, தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்யலாம். டிச., 15 ம் தேதிக்குள், தொடக்க கூட்டுறவு, தேசிய வங்கிகளில் பிரிமியம் செலுத்த வேண்டும். சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு 117; இதர விவசாயிகள் 130 ரூபாய் செலுத்த வேண்டும், என்றார்.

**தோட்டக்கலைத்துறையில் மானிய விலை பழக்கன்றுகள்**


பதிவு செய்த நாள் : டிசம்பர் 03,2010,22:03 IST

சிவகங்கை: ""தோட்டக்கலை பண் ணை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு பழ, மரக்கன்றுகள் வழங்கப்படும்," என துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறியது:

மாவட்டத்தில் நல்ல மழை பெய்துள்ளது. இதை பயன்படுத்தி விவசாயிகள் நடவு செய்ய, பழ, மரக்கன்றுகள் தேவகோட்டை, நேமம் தோட்டக்கலை பண்ணையில் தயார் நிலையில் உள்ளன. இங்கு மா, நெல்லி, சப்போட்டா, முந்திரி, கொய்யா, நாவல், தென்னை, பலா கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.  மா ஒட்டுக்கன்றுகளில் பங்கனப்பள்ளி, ஹிமாயுதின், அல்போன்ஷா, செந்தூரா, காளப்பாடு, பெங்களூரா ரகங்கள் உற்பத்தியாகின்றன. நெல்லியில் என்.ஏ.,7, கிருஷ்ணா, காஞ்சன், பி.எஸ்.ஆர்.,1; சப்போட்டாவில் பி.கே. எம்.,2. 3; கொய்யாவில் லக்னோ 49 ; முந்திரியில் விருத்தாச்சலம் 2, 3 உற்பத்தியாகிறது. தென்னை, புளி, வேம்பு, தேக்கு, புங்கன் மரக்கன்றுகளும் வினியோகம் செய்யப்படும். இவை தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும், என்றார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *இதுவரை 8 குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ள சூழ்நிலையில் வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை தமிழ்நாடு முழுவதும் பலத்த மழை பெய்யும்*



வங்கக்கடலில் புதிய காற்றழுத்தம் உருவாகி இருப்பதைக் காட்டும் செயற்கை கோள் படம்.

சென்னை, டிச.4–

இதுவரை 8 குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ள சூழ்நிலையில் வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளதால் தமிழ்நாடு முழுவதும் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாட்டில் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்வது வழக்கம். இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 29–ந் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து தமிழ்நாடு முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பாபநாசம், மணிமுத்தாறு உள்பட அனைத்து அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன.

இது மட்டும் அல்லாமல் தமிழ்நாடு முழுவதும் கிராமங்களில் உள்ள சிறு சிறு குளங்களும் நிரம்பி உள்ளன. சென்னை, திருவள்ளூர் மாவட்டத்தை தவிர அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ஆண்டை பெய்த சராசரி மழையை விட இந்த ஆண்டு அதிக மழை பெய்துள்ளது. இதனால் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருவதால் கடந்த 10 நாட்களாக ராமநாதபுரம், கடலூர், தஞ்சை உள்பட பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

புதிய காற்றழுத்தம்

தமிழ்நாட்டில் மழை–வெள்ளத்தால் இது வரை 123 பேருக்கு மேல் பலியாகி உள்ளனர். தொடர்ந்து பெய்து வரும் மழையால் சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வட கிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து இதுவரை வங்கக்கடலில் ஒரு ஜல் புயலும், 8 குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையும் உருவாகி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சூழ்நிலையில் வங்கக்கடலில் நேற்று மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதனால் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

புதிய காற்றழுத்த தாழ்வு நிலை

நேற்று இலங்கை மற்றும் தமிழகத்தையொட்டி உள்ள வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது மேற்கு நோக்கி நகர்ந்து விட்டது. ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உதயமாகி உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது, இலங்கையையொட்டி உள்ள தென் மேற்கு வங்கக்கடல் முதல் ஆந்திராவையொட்டி உள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் வரை நீடிக்கிறது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது.

வரும் 24 மணி நேரத்தை பொறுத்த வரை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள்மாவட்டங்களில் அநேக இடங்களிலும் மழையை எதிர்பார்க்கலாம். ஒரு சில இடங்களில் கனமழை மற்றும் மிக கனமழை வருவதற்கான வாய்ப்பு உண்டு.

சென்னையில்

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஆந்திரா வரை நீடிப்பதால் சென்னையில் மழை பெய்ய வாய்ப்பு அதிகம் உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இயல்பு நிலையை விட அதிக மழை பெய்துள்ளது.

இந்த ஆண்டு பழனியில் ஒரே நாளில் அதிகபட்சமாக 31 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களை தவிர மற்ற மாவட்டங்களில் இயல்பான அளவைவிட அதிக மழை பதிவாகி உள்ளது. சென்னையில் நேற்று வரை 28 சதவீதம் குறைவான மழை பதிவாகி உள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி நாகை மாவட்டம் தலைஞாயிறு 17 செ.மீட்டர், ஒரத்தநாடு 13 செ.மீட்டர், திருத்துறைபூண்டி 12 செ.மீட்டர், காட்டுமயிலு, உடையாளபட்டி, பாவநாசம், 11 செ.மீட்டர், முத்துப்பேட்டை, திருவாரூர், இலுப்பூர் 10 செ.மீட்டர், பேராவூரணி, வல்லம், மள்ளார்குடி, நீடாமங்கலம், கீரனுர், மருங்காபுரி 9 செ.மீட்டர், அதிராமபட்டிணம், மதுக்கூர், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, திண்டுக்கல், 8 செ.மீட்டர், பண்ருட்டி, தஞ்சாவூர், பெருங்கள்ளூர், மணிமுத்தாறு, தாராபுரம் 7 செ.மீட்டர், கொடவாசல் 6 செ.மீட்டர், கள்ளக்குறிச்சி, பட்டுக்கோட்டை, நன்னிலம், அறந்தாங்கி, கரம்பக்குடி, விராலிமலை, புதுக்கோட்டை, கடலாடி, ராமநாதபுரம், அம்பாசமுத்திரம், செங்கோட்டை, நத்தம், வேடசந்தூர் 5 செ.மீட்டர், தொழுதூர், காரைக்கால், திருமயம், முதுகுளத்தூர், காங்கேயம், மணப்பாறை, திருமங்கலம்,

சிவகங்கை, விருதுநகர், காமாட்சிபுரம், நிலக்கோட்டை 4 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

## கொப்பரைத் தேங்காய் பற்றாக்குறையால் தேங்காய் எண்ணெய் விலை மேலும் அதிகரிக்கும் சூழ்நிலை



பி கே கிருஷ்ணகுமார்
கொச்சி

கொப்பரைத் தேங்காய்க்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது. குறிப்பாக தென் மாநிலங்களில் பற்றாக்குறை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் நுகர்பொருள் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் மீண்டும் தேங்காய் எண்ணெய் விலையை உயர்த்த தயாராகி உள்ளன.

மீண்டும் உயர்கிறது

பற்றாக்குறை காரணமாக கொப்பரைத் தேங்காய் விலை அண்மைக் காலமாக தொடர்ந்து அதிகரித்த நிலையில் உள்ளது. மூலப்பொருள் செலவினம் உயர்ந்ததால் சில முன்னணி நிறுவனங்கள் தேங்காய் எண்ணெய் விலையை இரண்டு மாதங்களுக்கு முன்பே உயர்த்தின. தற்போது மீண்டும் விலையை அதிகரிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றன.

நாட்டின் கிழக்கு மாநிலங்களில் மிகப் பிரபலமாக உள்ள தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் ஷாலிமார் நிறுவனம் சில வாரங்களுக்கு முன் விலையை 20 சதவீதம் உயர்த்தியது. கொல்கத்தாவைச் சேர்ந்த இந்நிறுவனம் தற்போது விலையை மீண்டும் உயர்த்த திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் விலையை மறுபடியும் 20 சதவீதம் உயர்த்த

வாய்ப்புள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதிப்பு

இது குறித்து ஷாலிமார் நிறுவனத்தின் விற்பனை மேலாளர் ஜே.பி. சர்க்கார் கூறும்போது, “கொப்பரைத் தேங்காய் விலை உயர்வால் நிறுவனத்தின் உற்பத்தி செலவினம் கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் லாப வரம்பு பாதிக்கப்படுகிறது. அதே சமயம் மூலப்பொருள் செலவினத்தை முழுவதுமாக நுகர்வோர் மீது சுமத்த இயலாத நிலை உள்ளது. ஓரளவு சுமையை நிறுவனமே ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பு விரைவில் உணரப்படும்” என்று தெரிவித்தார்.

கேரளாவைச் சேர்ந்த கே.பி.எல். ஆயில் மில்ஸ் நிறுவனம் சுதி என்ற தேங்காய் எண்ணெய் பிராண்டைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயை ரூ.99.50 என்ற அளவில் விற்பனை செய்து வருகிறது. அடுத்த வாரத்தில் இந்நிறுவனம் விலையை ரூ.105–ஆக உயர்த்த உள்ளது. முதல் முறையாக இந்த பிராண்டின் விலை ரூ.100 என்ற அளவை தாண்டுகிறது என இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் டெனி ஜான் தெரிவித்தார்.

கேரள அரசுக்கு சொந்தமான கேராஃபெட் நிறுவனமும் தேங்காய் எண்ணெய் விலையை தற்போது ரூ.95–ஆக உயர்த்தியுள்ளது. இது, சில வாரங்களுக்கு முன்பு வரை ரூ.89 என்ற அளவில் இருந்தது. அண்மை காலமாக விலை உயர்ந்து வரும் நிலையிலும், நம் நாட்டில் தேங்காய் எண்ணெய் பயன்பாடு சிறிதும் குறையவில்லை என இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஃபெபி வர்கீஸ் கூறினார்.

அவர் மேலும் கூறும்போது, “தேங்காய் எண்ணெய் விலை உயரும் காலங்களில் கலப்பட தயாரிப்புகளின் புழக்கம் அதிகரித்து விடுகிறது. ஆனால் நிறுவனத்தின் பிராண்டில் வாடிக்கையாளர்கள் மிகுந்த மதிப்பு வைத்துள்ளனர். தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக விற்பனை அதிகரித்து வருவதே இதற்கு சான்றாகும். 3 ஆண்டுகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை முறையே 800 டன், 1,000 டன் மற்றும் 1,200 டன்னாக உள்ளது” என்று தெரிவித்தார்.

கனமழை

முன்னணி நுகர்பொருள் நிறுவனமான மாரிக்கோ, ‘பாராசூட்’ எனும் முன்னணி தேங்காய் பிராண்டைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் சில மாதங்களுக்கு முன் இதன் விலையை 5 சதவீதம் உயர்த்தியது. தொடர்மழையால் கொப்பரைத் தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பற்றாக்குறை உள்ள நிலையில் மழையும் இடர்பாடு ஏற்படுத்தியுள்ளதால் இந்நிறுவனம் ‘பாராசூட்’ விலையை மேலும் உயர்த்த வேண்டிய நிலைக்கு வந்துள்ளதாக தெரிகிறது.

கனமழை காரணமாக இவ்வாண்டு தேங்காய் உற்பத்தியிலும் பின்னடைவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளா மற்றும் தமிழ்நாட்டில் தேங்காய் அதிக அளவில் உற்பத்தியாகிறது. இவ்விரு மாநிலங்களிலும் அதிக அளவில் தேங்காய் உற்பத்தியாகும் இடங்களில் அதிக மழையால் உற்பத்தி குறைந்து விடும் என்று கூறப்படுகிறது.

சென்ற ஆண்டில் சில்லரை விற்பனையில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை ரூ.60 என்ற அளவில் இருந்தது. இது, அண்மைக் காலத்தில் ரூ.85–90–ஆக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில், கேரளாவில் தேங்காய் உற்பத்தி 40 சதவீத அளவிற்கும், தமிழ்நாட்டில் 15 சதவீத அளவிற்கும் குறையும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர். இதனால் கொப்பரைத் தேங்காய் உற்பத்தியும் பாதிக்கப்படும்.

தேங்காய் உற்பத்தி

கடந்த 2004–05–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவில் 1,283 கோடி தேங்காய்கள் உற்பத்தி ஆகியுள்ளன. இது, 2007–08–ஆம் நிதி ஆண்டில் 1,474–ஆக உயர்ந்தது. இதே காலத்தில், ஒரு ஹெக்டேர் தென்னந்தோப்பிலிருந்து பெறப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை 6,632–லிருந்து 7,747–ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் வகையில் தேங்காய் மேம்பாட்டு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக, தேங்காய் தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தற்போது நம் நாட்டில் ஏழு மாநிலங்களில் 574 மையங்கள் உள்ளன. இதன் வாயிலாக 80,000 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். கேரளாவில் மட்டும் 332 மையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 13 ஆண்டுக்கு பிறகு திருமூர்த்தி அணை நிரம்பியது உபரிநீர், உப்பாறு அணைக்கு திறந்து விடப்பட்டது



மழை காரணமாக திருமூர்த்தி அணை நிரம்பி கடல் போல் காட்சி அளிப்பதை படத்தில் காணலாம். | திருமூர்த்தி அணை பிரதான கால்வாயில் தண்ணீர் சீறிப்பாய்ந்து செல்லும் காட்சி.

உடுமலை,டிச.4–

உடுமலையை அடுத்த திருமூர்த்தி அணை 13 ஆண்டுக்கு பிறகு நிரம்பியது. அணையில் இருந்து உபரி நீர் உப்பாறு அணைக்கு நேற்று திறந்து விடப்பட்டது.

திருமூர்த்தி அணை

பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டத்தின் கீழ் (பி.ஏ.பி.) பரம்பிக்குளம் அணையில் இருந்து, உடு மலையை அடுத்த திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டு, பின்னர் பாசனத்துக்கு திறந்து விடப்படுகிறது. இந்த பி.ஏ.பி. பாசன திட்டம் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதில் ஒரு மண்டலத்துக்கு 135 நாட்களை பாசன காலமாக கொண்டு உரிய இடைவெளி விட்டு 90 நாட்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பாசன திட்டத்தில் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் முதல் மண்டலத்தில் 94 ஆயிரத்து 446 ஏக்கர், 2–வது மண்டலத்தில் 92 ஆயிரத்து 806 ஏக்கர், 3–வது மண்டலத்தில் 92 ஆயிரத்து 980 ஏக்கர், 4–வது மண்டலத்தில் 92 ஆயிரத்து 920 ஏக்கர் என்று மொத்தம் 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது.

மழை

திருமூர்த்தி அணையில் இருந்து 2–வது மண்டல பாசனத்துக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் 27–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஒரு சுற்றுக்கு 17 நாட்கள் வீதம் 6 நாட்கள் இடைவெளி விடப்பட்டு அரசு உத்தரவுப்படி 51 நாட்கள் தண்ணீர் விடப்பட்டது. இதையடுத்து 3–வது மண்டல பாசனத்துக்கு கடந்த 1–ந் தேதி தண்ணீர் திறந்து விட திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் பி.ஏ.பி. பாசனத்தில் பயன் பெறக் கூடிய பகுதிகளில் மழை பெய்ததால், அணையில் இருந்து தண்ணீர் திறப்பது ஒத்திவைக்கப்பட்டது.

13 ஆண்டுக்கு பிறகு

இதற்கிடையில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக திருமூர்த்தி அணை நேற்று அதிகாலை நிரம்பி யது. திருமூர்த்தி அணையின் மொத்த உயரம் 60 அடி. மொத்த தண்ணீர் கொள்ளளவு ஆயிரத்து 935 மில்லியன் கன அடி. அணையில் நேற்று காலை 7 மணிக்கு முழு கொள்ளளவு தண்ணீர் இருந்தது.

அணைக்கு வினாடிக்கு பாலாற்றின் மூலம் 527 கன அடி, காண்டூர் கால்வாய் மூலம் 226 கன அடி என்று மொத்தம் 753 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. காண்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தபட்டு 2 வாரம் ஆகிறது.

*மேலும் மழை காரணமாக ஆங்காங்கு உள்ள சிறு, சிறு ஓடைகள், காட்டாறுகள் மூலம் தண்ணீர் காண்டூர் கால்வாய்க்கு வந்து திருமூர்த்தி அணையில் சேர்கிறது. திருமூர்த்தி அணை பகுதியில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 23.5 மில்லி மீட்டரும், நல்லாறு பகுதியில் 20 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. இதனால் 1997–ம் ஆண்டுக்கு பிறகு 13 ஆண்டு கழித்து தற்போது முழு கொள்ளளவுடன் அணை நிரம்பியுள்ளது.*

*உபரிநீர் வெளியேற்றம்*

*திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று காலை 7 மணிக்கு முன்னதாக வினாடிக்கு 6 கன அடி தண்ணீர் ஊராட்சி பகுதிக்கும், 5 கன அடி தண்ணீர் நகராட்சி பகுதிக்கும் குடிநீருக்காக திறந்து விடப் பட்டிருந்தது. மேலும் அணை நிரம்பியதால், அதன் பாதுகாப்பு கருதி காலை 8 மணிக்கு அணையில் இருந்து உபரிநீர் பரம்பிக்குளம் பிரதான கால்வாய் மூலம் உப்பாறு அணைக்கு திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.*

*திருமூர்த்தி அணையை பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கே.பன்னீர்செல்வம் நேற்று காலை யில் பார்வையிட்டார். அணைக்கு தண்ணீர் வருவதை உதவி செயற்பொறியாளர் ஏ.கருணாகரன், இளம் பொறியாளர் கே.தர்மன் ஆகியோரின் மேற்பார்வையில் பொதுப்பணித்துறையினர் இரவு, பகலாக கண்காணித்து வருகின்றனர்.*

*உப்பாறு அணை*

*தாராபுரம் தாலுகாவில் உள்ள உப்பாறு அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 24 அடி. மொத்த தண்ணீர் கொள்ளளவு 572 மில்லியன் கன அடி. இந்த அணைக்கு காட்டாற்று வெள்ளம் மற்றும் ஓடைகள் மூலமாக நேற்று காலையில் வினாடிக்கு 436 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நேற்று காலையில் அணையின் நீர் மட்ட உயரம் 18.5 அடியாக இருந்தது. 357.50 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. இந்த பகுதியில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 42 மில்லி மீட்டர் மழை பெய்திருந்தது. இந்த நிலையில் நேற்று காலை திருமூர்த்தி அணையில் இருந்து உபரி நீர் உப்பாறு அணைக்கு திறந்து விடப்பட்டு உள்ளதால் அந்த அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. உடு மலையில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 33 மி.மீ மழை பெய்துள்ளது.*

*பஞ்சலிங்கம் அருவிக்கு செல்ல தடை*

*திருமூர்த்திமலையில் உள்ள பஞ்சலிங்கம் அருவியில் பாலாற்று வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.*

*இதனால் திருமூர்த்திமலைக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கோவில்*

உள்ள மலையடிவார பகுதி வரை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். பஞ்சலிங்கம் அருவி பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பஞ்சலிங்கம் அருவி யில் தண்ணீர் கொட்டுவதை பயணிகள் யாராவது செல்லக் கூடும் என்பதால் பாதுகாப்பு கருதி கோவில் பணியாளர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## மோசமான காலநிலையால் காபி விளைச்சல் பாதிக்கும் அபாயம்



கூடலூர் பகுதியில் காபி செடியில் உள்ள காய்கள் பழுக்க தொடங்கி உள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர்,டிச.4–

மோசமான கால நிலை யால் கூடலூர் பகுதியில் காபி விளைச்சல் பெருமளவு பாதிக்கும் அபாயம் எழுந்துள்ளது. இதனால் காபி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

காலநிலை மாற்றம்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக காபி விவசாயம் நடைபெற்று வருகிறது. தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் காபி, குறுமிளகு, இஞ்சி, கிராம்பு, ஏலக்காய் உள்ளிட்ட பணப்பயிர்கள் கூடலூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விளை விக்கப்படுகின்றன. வழக்கம் போல் ஆண்டுதோறும் நவம்பர் மாதங்களில் பருவமழை முடிந்து இதமான காலநிலையிலும், இரவில் கடுங்குளிரும் ஏற்படும்.

ஆனால் இந்த ஆண்டு பருவமழை மிக காலதாமதமாக பெய்தது. இருப்பினும் காலநிலை மாற்றத்தால் தொடர்ந்து பரவலான மழை கூடலூர் பகுதியில் பெய்து வருகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் காபி செடிகளில் பூக்கள் பூக்க தொடங்கும். பின்னர் காய் காய்த்து நவம்பர் மாதங்களில் பழுக்க தொடங்கும்.

உதிர்ந்து விழும் பழங்கள்

ஆனால் காலநிலை மாற்றத் தால் கூடலூர் பகுதியில் பரவலான மழை பெய்து வருவதால் செடிகளில் உள்ள காபி பழங்கள் வெடித்தும், கீழே உதிர்ந்தும் வீணாகி வருகின்றன. தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் காபி விளைச்சல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து காபி விவசாயி ஒருவர் கூறும் போது, வழக்க மாக நவம்பர் மாதங்களில் காபி பழங்கள் பழுக்க தொடங் கும். பகலில் வெயிலும், இர வில் பனிக்காலமாக இருக்கும். தற்போது காலநிலை மாற்றம் ஏற்பட்டு பரவலாக மழை பெய்து வருவதால் காபி பழங்கள் கிழே விழுந்து நாசமாகி வருகின்றன. இதனால் எங்களுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால் செடிகளில் உள்ள காபி பழங்கள் அழுகி வீணாக அதிக வாய்ப்புள்ளது என கவலையுடன் தெரிவித்தார்.

இதே நிலை நீடித்தால் நீலகிரி மாவட்டத்தில் காபி விளைச்சல் கடுமையாக பாதிக்கும் அபாயம் எழுந்துள் ளது. விளைச்சல் பாதித்தால் காபி விலை உயரவும் வாய்ப்பு உள்ளது.